**தலைப்பு 284 – வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 284 வனசீவராசிகள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 10 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 2,191.85 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 1,832.06 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 359.79 மில்லியன் அதாவது 16.41 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 1,054.67 | 1,041.91 | 12.76 | 1.21 |
| மூலதனம் | 1,137.18 | 790.15 | 347.03 | 30.52 |
| **மொத்தம்** | **2,191.85** | **1,832.06** | **359.79** | **16.41** |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்

திணைக்களத்தினால் 2016 ஆண்டிற்கான வருமானக் குறியீடு ஒன்றிற்காக ரூபா 20.00 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 25.40 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீட்டு வருமானத்தில் 27.00 சதவீதத்தினால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக மிகைத்தல் |
|---|---|---|---|---|
| | மதிப்பீடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகைத்தல் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20-03-02-06 | 20.00 | 25.40 | 5.40 | 27.00 |

## 2.3 முற்பணக் கணக்கு

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 28401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 50.00 | 49.99 | 38.00 | 38.78 | 147.00 | 141.10 |

### 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 05 பொது வைப்புக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 269.75 மில்லியனாக இருந்தது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0158/000 | 10.56 |
| 6000/0000/00/0013/0111/000 | 4.18 |
| 6000/0000/00/0016/0101/000 | 64.74 |
| 6000/0000/00/0018/0103/000 | 10.53 |
| 6000/0000/00/0019/0025/000 | 179.74 |
| | 269.75 |

### 2.5 கணக்காய்வு அவதானிப்பு

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழ்க் குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சில பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளதுவரையாக்கப்படாதிருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | விடுமுறைப் பதிவேடு | தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 | கிளிநொச்சி கால்நடை மருத்துவ அலுவலகம், பக்கமுன பீட்டு அலுவலகத்தில் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | யானை வெடி இருப்புப் பதிவேடு | 2013-10-16 ஆந் திகதிய 15/2003 ஆம் இலக்க கணக்கு சுற்றறிக்கை | மவ்ஆர, மாதுறு ஓயா, சுங்காவில், வவுனியா வலயங்களில் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | சுடுகலன் மற்றும் தோட்டாக்கள் எடுத்துச் செல்லும் பதிவேடு | 2009-11-08 ஆந் திகதிய 05/2009 ஆம் இலக்க கணக்கு சுற்றறிக்கை | மேல் மாகாணம், கிளிநொச்சி, நல்லதண்ணி, மவ்ஆர, வவுனியா வனம், வவுனியா வலயம் ஆகிய அலுவலகங்களில் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

**3.2 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 81,403,951 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 215(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் திணைக்களத்தினால் செலவின கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 2,403,144 தொகை பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் மொரகஹகந்த களுகங்கை செயற்திட்டத்தின் கீழ் செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 220,504,859 உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) சுனாமிக்குப் பின்னரான செயற்திட்டத்திற்காக கிடைத்த ரூபா 1,945,719 தொகை கணக்காய்வு திகதியான 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலவிடப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

**3.3 வருமானக் கணக்கு**

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.03.02.06 ஆம் வருமானக் குறியீட்டிற்குரிய வருமான மதிப்பீடுகளை தயாரித்தல், வருமானத்தை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் செயற் பொறுப்புக்கள்

கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது மஹகனததராவ, வீவல மற்றும் நில்கல சுற்றுலா விடுதிகள் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்ற வகையிலும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டமையால் கருத்திற்கொள்ளப்படக் கூடிய வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 28401 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 803,463 ஆக இருந்தது. அந்த நிலுவை கடன் மீதிகள் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலைமையில் காணப்பட்டது.

## 3.5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அவ் அறிக்கை 2017 யூன் 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொஹெலாங்கல முதல் கரம்பவெவ வரை 46 கிலோமீற்றர் மின்சாரவேலி நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் போது மின்சாரவேலியில் 25.5 கிலோமீற்றர் நிர்மாணிப்பதற்கு தேவையான காணியை டோசரினால் தயார் செய்வதற்காக ரூபா 2,951,842 செலவிடப்பட்டிருந்தது. வேலி நிர்மாணிக்கப்படாததன் காரணமாக அச் செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது.

(ii) திணைக்களத்திடம் காணப்படும் 55 வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலைமையில் காணப்படாமையால் அவை பயன்படுத்தாமலும் குறைப்பயன்பாட்டு நிலைமையில் காணப்பட்டன.

(iii) மாதுறுஓயா தேசிய பூங்காவின் கீழான பயிற்சி நிலையமொன்றாக பயன்படுத்தப்பட்ட (சோஷல் கட்டிடம்) 06 அறைகள் மற்றும் விரிவுரை மண்டபமொன்றுடன் கூடிய கட்டிடம் (நீளம் 65x45 அளவிலான) எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அவ்வறிக்கை 2017 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தினால் 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வு 2015 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருந்தது.

**(இ) வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

நீண்டகாலம் கடந்திருந்த போதிலும், வெவ்வேறு நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 10 வாகனங்களின் உரித்தை கையேற்பதற்கு 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.7 செயலாற்றல்**

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**திட்டமிடல்**

16 செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்படாத செயற்திட்டங்களுக்காக ரூபா 121,246,566 மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. 14 செலவின விடயங்களின் கீழ் ரூபா 103,668,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த பல செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) வில்பத்து தேசிய பூங்காவின் கொக்மோடே சூரிய சக்தி நீர்க் குழாய் முறைமையை அமைப்பதற்காக காணி நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு ரூபா 5,883,818 தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும், அச்செயற்பாடு மொனறாகலை ஹுலந்தாவ பிரதேசத்தின் நிறுவனமொன்றினால் நிறைவேற்றப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) காட்டு யானைகளின் தாக்குதலுக்கு உட்படக்கூடிய இடங்களை அண்மித்ததாக 18 அறிவூட்டல் விவரணப் பதாகைகளை பொருத்துவதற்கு ரூபா 6,855,000 வரியில்லாத பெறுமதிக்கு இலங்கை வனசீவராசிகள் நம்பிக்கை பொறுப்பிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 1,350,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் செயற்பாடு நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், 10 பெயர் பதாகைகள் மாத்திரம் பொருத்தப்பட்டிருந்ததுடன், பொருத்தப்பட்டிருந்த சில பதாதைகள் கழன்று இருந்ததுடன் விதந்துரைகளுக்கு இணங்காத விவரண பதாதைகள் பொருத்தப்படாதிருந்ததாக தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு அறிக்கையிட்டிருந்தது. எவ்வாறாயினும், அவ்விவரண பதாகைகள் உரிய நிலமைக்கு கொண்டு வருவதற்கு 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பூந்தல தேசிய பூங்காவின் உடமலல பிட்டு பிரதேசத்திற்குரிய கொஹொலங்கல குளம் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,229,820 செலவு செய்து புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு குளத்தின் மதில் வேலைகள் பூர்த்தி

செய்யப்பட்டிருந்தன. கணக்காய்வு திகதியான 2016 செப்தெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் வான் கதவுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் குளத்தில் சேரும் மழை நீர் அநேகமான அளவில் வீணாவதுடன் மழைகாலத்தில் தற்போது நீர் வழிந்தோடும் வடிகாண் மேலும் விரிவடைவது அவதானிக்கப்பட்டது. இந்நிலமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் குளச் சுவரை புனரமைக்கும் நோக்கமும் பயனற்றதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2011 செப்தெம்பர் 13 ஆந் திகதி மன்னார் பதவியணியினர் உத்தியோகபூர்வ விடுதி, வனப் பாதுகாப்பு அலுவலகம் மற்றும் தொழிலாளர் இல்லம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,933,200 தொகை ஒப்பந்தகாரர்களுக்கு வேலை ஆரம்பிப்பு முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2016 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையில் 5 வருட காலம் கடந்திருந்த போதிலும், அச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணங்களுக்காக ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முற்பண காப்பின் காலம் முடிவடைவதற்கு முன்னர் அப்பணத்தை அறவிடுவதற்கோ அல்லது காலத்தை நீடிப்பதற்கோ திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை.

### 3.9 தீர்வுசெய்யப்படாத கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறைகள் தொடர்பாக திணைக்களத்தினால் சீர்செய்யப்படாதிருந்த பந்திகளுடனான தொடர்பு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2015 | 3.6(இ) | ஜயன்திபுர பத்தரமுல்ல புதிய தலைமை அலுவலகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் சட்டரீதியான உரிமை கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஏப்ரல் 30 திகதி வரை உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

### 3.10 முகாமைத்துவப் பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மின்னேரியா தேசிய பூங்காவின் எல்லையிலிருந்து 150 மீற்றர் அளவு தூரத்தில் பேரக வலயத்தில் மொரகஸ்வெவ சிகிரியா வீதியின் பொதான பிரதேசத்தில் அத்துமீறிய கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2009 இன் 22 ஆம் இலக்க வனவிலங்கு மற்றும் மர தாவரங்களை பாதுகாக்கும் கட்டளைச்சட்டத்தின் (469 அதிகாரம்) 3(அ)(2) பிரிவிற்கு முரணாக அந்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 யூலை 10 ஆந் திகதி வரையிலும் அதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பணிப்பாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) 1994 ஆம் ஆண்டில் திருத்த வேலைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்ட சேர்வில் வகையான பவுசர் வண்டி மற்றும் ஜீப் வண்டி கராஜில் வைக்கப்பட்டிருந்ததன்

காரணமாக அந்நிறுவனத்தினால் நில வாடகையாக ரூபா 1,500,000 கோரி 2007 திசெம்பர் 12 ஆந் திகதி திணைக்களத்திற்கு எதிராக நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கிணைக்களத்தின் மூன்று உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவொன்றினால் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அப்பரிந்துரைகளை இறுதியாகவும் பூரணமாகவும் செயற்படுத்துவதற்கு சட்டரீதியாக தடையொன்று இல்லையென சட்டமா அதிபரால் 2013 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய சீ/131/2004 (உப) ஆம் இலக்க கடிதத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் உரிமையாளர்களிடமிருந்து 03 சந்தர்ப்பங்களில் அப்பரிந்துரைகள் தொடர்பாக கருத்துரைகள் மற்றும் இணக்கப்பாடுகள் கோரப்பட்டிருந்த போதிலும் 2017 யூலை மாதம் வரையிலும் நிறுவனத்தினால் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதிருந்ததுடன் 2015 பெப்ரவரி 12 ஆந் திகதி வரையிலும் பின் தொடர் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

## 3.11 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 61 | 28 | 33 |
| (ii) | மூன்றாம் நிலை | 32 | 25 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,419 | 1,029 | 390 |
| (iv) | ஆரம்ப நிலை | 830 | 753 | 77 |
| | **மொத்தம்** | **2,342** | **1,835** | **507** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை விஞ்ஞான சேவையின் 33 உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை 06 உத்தியோகத்தரகள் மூலம் நிறைவேற்றுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்தமையால் ஒரு உத்தியோகத்தருக்கு பல பதவிகளில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நேர்ந்திருந்தது. பதவிகளுக்கு முழு நேர உத்தியோகத்தர்களின் சேவை தேவைப்பாடு இருக்கும் போது மேற்படி நடவடிக்கை எடுத்தமையால் கடமைகளின் செயற்திறனுக்கு பாதகம் ஏற்படுவது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய டீ.எம்.எஸ்/ஜீ2/56/2 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் இலங்கை விஞ்ஞான சேவையில் 30 உதவிப் பணிப்பாளர் / பிரதி பணிப்பாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இப்பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் அப்பதவிகளில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2006 ஆம் ஆண்டு முதல் 18 வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்